**செய்தி வெளியீடு எண்: 158** **நாள்: 02.03.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 1.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், இராமநாதபுரம் மாவட்டம், கல்பாரில் 2 கோடியே 75 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 21 கோடியே 92 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடங்களை திறந்து வைத்து, மின்னாளுமை திட்டத்தின் கீழ் இ–சேவை மையம் வழியாக பொதுமக்களுக்கு 15 வகையான சான்றிதழ்களை வழங்கிடும் திட்டம் மற்றும் அம்மா கைப்பேசிச் செயலி சேவை ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள்.

அரசின் நலத் திட்டங்களை மக்களிடையே முறையாக கொண்டு சென்று அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய்த் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய்த்துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் கடலோர மாவட்ட மக்கள் தங்கிட ஏதுவாக பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் மக்கள் தங்கிட ஏதுவாக உலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டத்தின் கீழ் பொதுப்பணித் துறை வாயிலாக இராமநாதபுரம் மாவட்டம், கல்பாரில் 2 கோடியே 75 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம் – திருப்பாலைக்குடி, திருவள்ளூர் மாவட்டம் – எளாவூர், காஞ்சிபுரம் மாவட்டம் – கானாத்தூர், திருவாரூர் மாவட்டம் – தில்லைவிளாக்கம், தஞ்சாவூர் மாவட்டம் – குப்பதேவன், செந்தலைவயல், கள்ளிவயல் மற்றும் ராஜமடம் ஆகிய இடங்களில் 21 கோடியே 92 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மின்னாளுமை திட்டத்தின் கீழ் இ–சேவை மையம் வழியாக பொதுமக்களுக்கு சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ் ஆகிய 5 சான்றிதழ்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன், மேலும், கீழ்க்கண்ட 15 வகை சான்றிதழ்களை இணையதள மின் சேவை மூலம் வழங்கிடும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

1. விவசாய வருமானச் சான்றிதழ்
2. சிறு, குறு விவசாயி சான்றிதழ்
3. கலப்புத் திருமணச் சான்றிதழ்
4. விதவைச் சான்றிதழ்
5. வேலையின்மைச் சான்றிதழ்
6. குடும்ப குடிப்பெயர்வு சான்றிதழ்
7. கல்வி ஆவணங்கள் பேரிடரால் தொலைந்தமைக்கானச் சான்றிதழ்
8. ஆண் குழந்தை இன்மைச் சான்றிதழ்
9. திருமணமாகவில்லை என்பதற்கான சான்றிதழ்
10. வாரிசு சான்றிதழ்
11. இருப்பிடச் சான்றிதழ்
12. செல்வ நிலைச் சான்றிதழ்
13. அடகு வணிகர் உரிமம் (Pawn Brokers Licence)
14. வட்டிக்கு பணம் கொடுப்போர் உரிமம் (Money Lenders Licence)
15. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ்

மேற்படி 15 சேவைகளை பெறுவதற்கு பொதுமக்கள் தங்கள் அருகாமையில் உள்ள பொதுசேவை மையங்களுக்குச் சென்று விண்ணப்பிக்கும் போது, விண்ணப்ப எண்ணுடன் ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். இவ்விவரம், அவர்களின் கைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். விண்ணப்பங்களின் நிலவரத்தை அறிய பொதுமக்கள் **155250** என்ற எண்ணிற்கு தங்களது விண்ணப்ப எண்ணை குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பியோ அல்லது இணையதளத்தில் விண்ணப்ப எண்ணை உள்ளீடு செய்தோ அறிந்து கொள்ளலாம். விண்ணப்பம் ஏற்கப்பட்டு சான்றிதழ் தயாரானதும், விண்ணப்பதாரருக்கு இணையதள முகவரியுடன் குறுஞ்செய்தி அனுப்பப்படும். இக்குறுஞ்செய்தி

பெறப்பட்டவுடன் விண்ணப்பதாரர் வீட்டில் இருந்தவாறே இணையதளம் மூலமாக சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அருகாமையிலுள்ள அரசு பொது சேவை மையம் மூலமாக சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமக்கள் நில ஆவணங்களை கைப்பேசி வாயிலாக எளிதாக இணைய வழியில் பெற்றுக் கொள்ளும் வகையில் 'அம்மா கைப்பேசிச் செயலி' (Access & Manage through Mobile from Anywhere e-Service of Land Records) சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த அம்மா கைப்பேசிச் செயலியை பொதுமக்கள் தங்களது ஆண்ட்ராய்டு கைப்பேசியில் இலவசமாக பதிவிறக்கம் செய்து நிறுவுவதன் மூலம், அ–பதிவேடு, சிட்டா, பட்டா மாறுதல் விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கை நிலை அறிதல், சம்பந்தப்பட்ட நிலமானது அரசு நிலமா அல்லது தனியார் நிலமா போன்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம். இச்செயலியானது, ஆண்ட்ராய்டு இயங்குதளம் (Operating System) பதிப்புகள் 4.1–க்கு மேற்பட்டவற்றில் செயல்படும்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் திரு.தா.கி. இராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஆணையர் திரு.ஆனந்த்ராவ் விஷ்ணு பாட்டில், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் டாக்டர் சந்தர மோகன், பி. இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் டாக்டர் ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை ஆணையர் திரு.இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்ட ஆணையர் திரு.அதுல் ஆனந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 2.3.2018